# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்


Vol:7 Issue :27 July 2025

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

---


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்

## *"Avvaiyar's Personality Traits in Purananuru Poems"*

***Dr. A.Shemala Vasantha***, *Associate Professor, Department of Tamil,Dr.SNS Rajalakshmi College of Arts and Science ,College (Autonomous),Coimbatore-641049*

***Abstract***

*Among the women poets of the Sangam period, Avvaiyar stands out for conveying essential moral values to society through her exemplary poems. Her verses emphasize that a life of selfless, virtuous conduct not only uplifts the individual but also contributes to the progress of society. Her poetry is deeply rooted in psychological insights, as psychology holds that the mind and behavior are inseparable. A close analysis of Avvaiyar's poems reveals her positive thinking and noble character. This article, titled "Avvaiyar's Personality Traits (as seen in Purananuru Poems)," presents a detailed explanation of her personality. It examines her personal dignity, diplomatic skills, self-initiative, and other admirable traits, comparing them with key psychological components of personality.*

***Keywords:*** *Sangam literature, Tamil, heroism, Purananur, culture*

**முனைவர் அ.சேமலா வசந்தா,**இணைப்பேராசிரியர்,தமிழ்த்துறை,டாக்டர் எஸ்.எஸ்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),கோயம்புத்தூர்-641049

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க கால பெண்பால் புலவர்களுள் ஒருவரான ஔவையார் தம் தகைசான்ற பாடல்கள் மூலம் சமுதாயத்திற்குத் தேவையான அறக்கருத்துகளை வழங்கியுள்ளார். சுயநலமற்ற சீர்மிகு நல்லொழுக்கம் மிகுந்த வாழ்க்கையே தனிமனிதனை மட்டுமல்லாமல் சமுதாயத்தையும் மேலோங்கச் செய்யும் என்பதை இவரது பாடல்கள் வலியுறுத்துவனவாய் உள்ளன. இவரது பாடல்கள் அனைத்தும் உளவியல் சார்ந்த கருத்துகளை உள்ளடக்கியுள்ளன. ஏனெனில் மனமும் அது சார்ந்த நடத்தையும் வேறல்ல இரண்டும் ஒன்றுதான் என்பதையே உளவியல் முன்னிறுத்துகின்றது. ஔவையாரின் பாடல்களை ஆய்வுக்கண் நோக்கும் போது அவை அவரது நேர்மறை எண்ணத்தையும் அவரது நடத்தையையும் வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் ஔவையாரின் ஆளுமைத்திறன் என்னும் (புறநானூற்றுப்பாடல்கள்) இக்கட்டுரையில் ஆளுமைத்திறனுக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதோடு அவரது தன்மானப்பண்பு, தூது

சென்ற திறன், தன்முனைப்பு போன்ற அவரது பண்புநலன்கள் உளவியலின் முக்கியக் கூறான ஆளுமைத் திறன் சார்ந்த கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், தமிழ், வீரம், புறநானூறு,பண்பாடு

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் காதல் மற்றும் வீரத்தினை அடிப்படைப் பொருண்மைகளாகக் கொண்டு எழுந்தன. மானுட வாழ்வியலை தளமாகக் கொண்டு தோன்றிய அவ்விலக்கியங்களுள் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சமுதாய நலன் சார்ந்ததாக இருப்பதோடு அவர்தம் எண்ணங்களை பிரதிபலிப்பதாகவும் இருந்து வருகின்றன. அவ்வகையில் புறநானூற்றில் ஔவையார் அவர்களால் பாடப்பட்ட பல பாடல்கள் உளவியல் சார்ந்த ஆளுமைப்பண்புகள் மிகுந்தவையாக காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்து வகைப்படுத்தி இனங்காண்பதாக இக்கட்டுரை உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

ஔவையார் அறிவுக் கூர்மையும், பாடல் புனையும் திறனும் பெற்றவர். மதிநுட்பம் நிறைந்த ஔவையாரின் பண்புநலன்களை உளவியல் நோக்கில் அறிதல் மிகவும் இன்றியமையாததாகும். ஔவையாரின் பாடல்கள் வழி புலப்படும் தன்மானப் பண்பு, தூது செல்லுதல், தன்னம்பிக்கை ஊட்டுதல் போன்றவற்றை ஆளுமைக் கருத்துக்களோடு ஒப்பிட்டுப்பார்த்து அவரது ஆளுமைத் திறனைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருதுகோள்**

சங்க இலக்கிய பெண்பாற் புலவரான ஔவையாரின் பாடல்களை ஆளுமைத் திறன் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து அவரது ஆளுமையின் திறத்தை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்;** ஆளுமை, பெர்சனாலிட்டி, தன்முனைப்பு, ஆக்கும் வகையினர், மேம்பாட்டு உள்ளம்

***Keywords:*** *Leadership, Personality, Self — initiative, Productive Individuals, Development Mindset.*

**ஆளுமை — விளக்கம்**

ஆளுமை என்பதற்குரிய 'பெர்சனாலிட்டி' (*Personality*) என்ற ஆங்கிலச் சொல் 'பெர்சனா' (*Persona*) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து உருவானதாகும். 'ஆளுமை' என்றவுடன்

நாம் நினைப்பது உடலமைப்பை தான். ஆனால் அது மட்டுமே ஆளுமை அல்ல. ஒருவரின் உள்ளே ஒளிந்திருக்கும் ஒவ்வொரு திறமையும் ஆளுமையாகும். ஒருவரின் உடலமைப்பு, நடந்து கொள்ளும் பாங்கு, ஆர்வம், மனப்பான்மை, திறமை, தொழிலார்வம் ஆகியவற்றின் தனித்தன்மை வாய்ந்த ஒருங்கிணைப்பே ஆளுமை என்கிறார் மன் என்னும் உளவியல் அறிஞர். இதனை,

***'தனி மனிதனுடைய எண்ணங்கள், செயல்படும்முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை ஆளுமை" (வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-II- ப:678)***

என்ற வரையறை எடுத்துரைக்கின்றது. எனவே ஒருனது உடல் தோற்றம் மட்டுமின்றி அவனிடம் காணப்படும் ஒவ்வொரு பண்பும் ஆளுமையில் அடங்கும். இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாக,

***"ஆளுமை என்பது உள்ளத்தின் சுருக்க வரையறை ஆகும்"*** (தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பு அறிவியல் - *ப:393)*

என்ற குறிப்பு அமைகின்றது. உள்ளத்தில் தோன்றும் அன்பு, அச்சம், பொறாமை, இரக்கம், நன்றியுணர்வு, ஊக்கம் போன்ற பண்பு நலன்கள் மனிதனுக்கு மனிதன் வேறுபடும் தன்மை கொண்ட காரணத்தால் ஒவ்வொரு மனிதனும் நேர்மறை அல்லது எதிர்மறை கொண்ட ஆளுமை பெற்றவனாகவே காணப்படுகின்றான். ஆயினும் பிறர்க்கு நலன் பயக்கும் நேர்மறை எண்ணம் கொண்ட ஆளுமை கொண்டவர்களையே சமுதாயம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

**ஔவையாரின் ஆளுமைப்பண்புகள்**

**தன்மானப்பண்பும் - தன்முனைப்பும்**

தமிழர்கள் தன் உயிரைவிட மானத்தையே பெரிதாக நினைத்தனர். அத்தமிழர் மரபில் வந்தவர் ஔவையார். ஔவையாரிடம் 'தன்மானம்' என்ற உணர்வு அதிகமாகக் காணப்படுகின்றது. இது அவரிடம் காணப்படும் போற்றுதலுக்குரிய ஆளுமைப்பண்பாகும். அக்காலத்தே தமிழகத்தே முடிவேந்தர்களையும், வேள்பாரி முதலிய வள்ளல்களையும் பாடி புகழை நிலை நிறுத்திய ஔவையார்க்கு அதியமானது புகழ் செவிப்புலனாகியதும் அவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. வழக்கம் போல பரிசிலர் உடன்வர ஔவையார் தகடூருக்குச் சென்றார். புகழ் வள்ளலாகிய அதியமானும் ஔவையாருடைய புலமை நலமும் மனநலமும் கேள்வியுற்றிருந்தான். ஔவையார் தன் அரண்மனைக்கு வந்தவுடன் அவரைச் சிலநாள் தன்னோடு இருக்க வைக்க வேண்டி அவருடன் வந்த பரிசிலர்க்கு வேண்டும் அளவுக்கு

பரிசுப் பொருட்களைக் கொடுத்து விடுவித்தான். எத்துணைச் சிறந்த புலவராயினும் ஒருவரது உள்ளத்தின் உள்ளே நிகழும் எண்ணங்களை அறிவது அரிது ஆகும்.

அதியமானின் கருத்தறியாத ஔவையார் அவன் பரிசில் நீட்டிப்பது குறித்து மனத்தே கவலையுற்றார். உடைந்த மனத்தோராகிய ஔவையார் வாயிற்காவலரை நோக்கி, "வாயிலோனே நீ எப்போதும் பரிசிலர் பரிசிற்கு வருந்தும் வாழ்க்கையுடையவர் என்பதறிந்து அவர்க்கு வாயிலை அடைப்பதில்லை. ஆயினும் எனக்கு மட்டும் வாயிலை அடைக்கின்றாய். இது உன்னுடைய செயல் அல்ல என்று எனக்குத் தெரியும். உன்னுடைய தலைவனாகிய அதியமான் ஒன்று அவனுடைய தகவுடைமையை அறிய வேண்டும். அல்லது என் தரத்தை அறிய வேண்டும். வேள்பாரி முதலிய நல்லோர் இறந்ததனால் இவ்வளமிக்க உலகம் வறியதாய் விடவில்லை. நாங்கள் எத்திசைச் சென்றாலும் சோறு குறை கிடையாது. சோறு ஒன்றே நான் வேண்டுவது என எண்ணி எனக்கு விடை தர நீட்டிப்பது விழுமியதன்று" என்று அவர் கோபமாகக் கூறுகின்றதை,

***"வாயிலோயோ வாயிலோயே வள்ளியோர் செவிமுதல்***

***வயங்குமொழி வித்தித்தாம் மழுவுடைக் காட்டகத்து அற்றே***

***எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம். 206)***

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது. ஔவையாரின் தன்மானம் என்ற பண்பினை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. மனித உள்ளத்தின் இயல்புகளுக்கு ஏற்றவாறே ஒவ்வொருவரின் ஆளுமையும் அமைகிறது. ஆளுமையை வெளிப்படுத்தும் மனநிலைகளாக பிராய்டு.

1) பண்படா உள்ளம்

2) தன்முனைப்பு

3) மேம்பாட்டு உள்ளம்

என்ற மூன்று கூறுகளைக் கூறுகிறார். இக்கூறுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது தன்முனைப்பு என்ற ஈகோ ஔவையாரிடம் வெளிப்படுகின்றது. அதனால் தான் ஔவையார் வாயில் காவலனிடம், அதியமான் அவனது தரத்தை அறிய வேண்டும் அல்லது என்னுடைய தரத்தை அறிய வேண்டும் என்று கூறுகிறார். இங்கு என்னுடைய என்ற வார்த்தையில் 'தான்' என்ற தன்னுணர்வு தலை தூக்குகிறது. அதனால் தான் எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே என்று கூறி புறப்படவும் முயல்கின்றார்.

**தூது செல்லுதல் ஆக்கும் வகையினர்**

ஒருவர் மற்றவர்க்குத் தம் கருத்தினை வலியுறுத்த தூது செல்லுதலை ஒரு சிறந்த கருவியாக நினைத்தனர். தூதானது ஒருவரது உள்ளத்துக் கருத்தினை மற்றவர்க்குப் புரிய வைப்பதற்கு உறுதுணையாக உள்ளது. பிரிவுக்கான காரணமாக,

***"ஓதல் பகையே தூதிவை பிரிவே"***

(தொல்காப்பியம், அகத்திணையியல்-27)

என தொல்காப்பியம் உரைக்கின்றது. தூது என்பது அகத்தூது அல்லது புறத்தூதாக அமையும். ஆண்கள் மட்டுமே தூது சென்ற காலக்கட்டத்தில் ஔவையார் தூது சென்றதை புறநானூறு பறைசாற்றுகின்றது. அதியமான் காலத்தே தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமான், அதியமான் பால் பகைமை கொண்டான். தன்னிடம் படைவலிமை அதிகமாக இருப்பதாக எண்ணி செருக்குற்றான். அதியமான் பொருட்டு தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையாருக்குத் தன் படைப் பெருமையைக் காட்ட எண்ணி தன் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று காட்டினான். தொண்டைமானின் படைக்கலத்தைப் பார்த்த ஔவையார்,

***"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்***

***கண்திறள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து***

***அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே"*** (புறநானூறு, பா.எண்-95)

என்று பாடுகின்றார். அதாவது இந்தப் படைக்கலங்கள் எல்லாம் மயிற்பீலி அணிவிக்கப்பெற்று, மாலை சூட்டி, பிடி திருத்தி கூர்மழுங்கிக் கெடாதிருக்க நெய் தடவி பாதுகாப்பாக உள்ளன. ஆனால் எம் தலைவன் அதியமானிடம் உள்ள படைக்கருவிகளோ பகைவர் உடலைக் குத்திக் பிழித்ததால் நுனி முறிந்து கொல்லன் உலைக்களத்திலேயே கிடக்கின்றன என்று பாடி தன் மதி நுட்பத்தினால் போரை நிறுத்துவதற்கு வழி செய்கின்றார்.

***" தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்***

***வாய்மை வழியுரைப்பான் பண்பு"*** (திருக்குறள்-688)

என்று திருக்குறள் உரைக்கும் தூதுவருக்கான பண்புகளுடன் ஔவையார் இருப்பதை மேற்கண்ட பாடலின் வழி உணரமுடிகின்றது. தூது சென்ற ஔவையார் தன் உயிருக்கும் அஞ்சாமல் எதிரி நாட்டு வேந்தனிடத்தில் அவனுக்கு புரியும் வண்ணம் எடுத்துரைப்பது தெளியலாகின்றது. இதனை உளவியல் கூறுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது ஔவையார் ஆக்கும்

வகையினர் என்ற ஆளுமைப்பண்பு கொண்டவர் என்பதை அறியமுடிகின்றது. பிரோம் என்ற உளவியல் அறிஞர் இவ்வாளுமைப் பற்றி,

ஆக்கும் வகையினர் என்ற ஆளுமையினர் சமூகத்தில் மிகக் குறைந்தவர்களாக உள்ளனர். அவர்கள் ஆக்கும் அன்பின் மூலம் படைப்பாற்றல் உடையோராகவும் மற்ற மனிதருடன் தொடர்பு கொள்வோராகவும் விளங்குகிறார்கள்'' என்று கூறுகின்றார்.

இக்கருத்தினை அடிப்படையாக வைத்து நோக்கும் போது தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் கடுமையான சொற்களைக் கூறாமல் அன்பான சொற்களின் மூலமே போரை நிறுத்துகின்றார். இதனையே,

***" இயல்பு வகையினர் சமூக ஈடுபாடு கொண்டு காணப்படுவர். இவர்கள் சிக்கலை வெல்லும் திறன் கொண்டவர்கள்"***

(சு.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல் - ப:85)

என்ற குறிப்பு எடுத்தியம்புகின்றது. ஔவையார் சமூக ஈடுபாடு கொண்டவராக இருந்ததால் தான் மக்களுக்கு பெருந்தீங்கையும் சிக்கலையும் விளைவிக்கும் போரை நிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டார் என்பது இவ்விடத்து நோக்கத்தக்கதாகும்.

**தன்னம்பிக்கை ஊட்டுதலும் சமூக தன்முனைப்பும்**

ஔவையாரின் பாடல்களில் மற்றொரு முக்கியமான பண்பு தன்னம்பிக்கை ஊட்டுதல் என்னும் திறனாகும். அடிக்கடி நிகழும் போர்களால் வீரர்கள் பலர் இறப்பதும் பொருட்கேடு உண்டாவதும் அதியமான் நினைவில் தோன்றி அசைவினைப் பிறப்பித்தன. போரைச் செய்யாது நிறுத்தினால் அதனால் வரும் கேடு அவனுடைய அறிவுக்குப் புலனாகவில்லை. அந்நிலையில் போரின் தேவையை உணர்ந்த ஔவையார் அதியமானைப் போர் செய்வதற்கு ஊக்க வேண்டிய கடமையுடையவரானார்.

***"உடைவளைக் கடுப்ப மலர்ந்த காந்தள்***
***அடைமல்கு குளவியொரு கமழுஞ்சாரல்***
***பொருநரும் உளரோ நீ களம் புகினே"***

(புறம் -90)

இப்பாடலில் ஔவையார் 'சமூகத்தன் முனைப்பு' என்ற உணர்வு வெளிப்பட நிற்கிறார். அதியமானின் உள்ளத்திற்குத் தன்னம்பிக்கை ஊட்டுகின்றார். அதனால் தான் புலி, சூரியன்

போன்றவற்றை அதியமானுக்கு உவமையாகக் கூறுகின்றார். அவனைப் போருக்கு எதிராக வெகுண்டெழச் செய்வதுடன் தளராத ஊக்கமும் தருகின்றார்.

சமூகத்தேவைகளும் சூழ்நிலைகளும் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. பண்பாட்டின் எதிர்பார்ப்புகளின் காரணமாகப் பல சிக்கல்களைத் தனிமனிதன் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. ஔவையார் ஒரு சமூக தன்முனைப்பு உள்ள பெண்ணாக அனைவருக்கும் காட்சி அளிக்கின்றார், அதியமானை எப்படியாவது போருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற ஒரு சிக்கலைச் சமூகத்திற்காக ஏற்றுக் கொள்கிறார். அச்சிக்கலைத் தீர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுவிடுகின்றார்.

**முடிவுரை**

ஔவையாரின் தன்மானப்பண்பு நிலையை ஆளுமைக் கருத்துக்களோடு ஒப்பிடும் போது அது தன்முனைப்பு என்ற ஆளுமை நிலையோடு ஒத்துப் போகின்றது. தன்மானம் என்ற உணர்வைக் காப்பதில் அனைவரையும் விஞ்சி விடுகிறார். தூது செல்வதில் ஆக்கும் வகையினர் என்ற ஆளுமைப் பண்பைக் கொண்டு காணப்படுகின்றார். தன்னம்பிக்கை ஊட்டுதல் என்ற நிலையில் சமூக தன்முனைப்பு உள்ள ஒரு பெண்ணாகக் காட்சி அளிக்கின்றார்.

**துணைநூல் பட்டியல்**

1. இரவிச்சந்திரன் தி.கு., சிக்மண்ட் ப்ராய்ட் உளப்பகுப்பு அறிவியல், அலைகள் வெளியிட்டகம், சென்னை-24.

2.கௌமாரீஸ்வரி(ப.ஆ), திருக்குறள்,பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்,சென்னை-14

3. சிவராஜ்.து,சங்க இலக்கியத்தில் உளவியல், சிவம் பதிப்பகம், வேலூர்-2

4. சுப்பிரமணியன் (தொ.ஆ), தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8

5. புறநானூறு- மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8

6. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-II, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை

## *Reference Books*

*1.Ravichandran, Sigmand Fraid Vulappaguppu Ariviyal, Alaigal veliyeetagam, Chennai-24*

*2.Gowmareeswari (pa.aa), Thirukkural, Parimelazhagar Vurai, Saratha Pathippagm, Chennai-14*

*3.Sivaraj.Thu, Sanga Ilakiyathil Vulaviyal, Sivam Pathipagam, Vellur-2*

*4.Subramaniyan(Tho.aa), Tholkappiyam, Manivasagar Pathippagam, Chennai-8*

*5.Puranaanooru-Moolamum Vuraiyum, Manivasagar Pathippagam, Chennai-8*

*6.Valviyar Kalanjiam, Thoguthi-II, Thamil Valarchi Kalagam, Chennai.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com